செ.வெ.எண்.10 நாள்: 04.09.2017

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை தொடர்பாக செய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டம் இன்று (04.09.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை அக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கி டிசம்பர் மாதம் முடிய பெய்ய வாய்ப்பு உள்ளது. ஆண்டுதோறும் சராசரியாக, 473 மி.மீ அளவு வடகிழக்கு பருவமழை திருநெல்வேலி மாவட்டத்தில் பெய்து வருகின்றது. 2015-ம் ஆண்டில் கூடுதலாக மழை பெய்து வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. 2015-ம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், அலுவலர்கள் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டால் எந்தெந்த பகுதிகளில் எவ்வகையான பாதிப்புகள் ஏற்படும் என்பதை தெரிந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பொதுப்பணித்துறை / நீர்வள ஆதார அமைப்பின் மூலம் கட்டுப்பாட்டில் உள்ள குளங்கள், கால்வாய்களை தொடர்ந்து மேற்பார்வையிட்டு கண்காணித்து வர வேண்டும். தூர்வாரும் பணிகளையும் 15 தினங்களுக்குள் முடிக்க வேண்டும். பொதுப்பணித்துறை, வருவாய்த்துறையின் மூலம் இணைந்து வெள்ள பாதிப்பு ஏற்பட்டால் மக்களை தங்க வைக்கத் தேவையான தங்கும் இடங்களை முன்கூட்டியே பார்வையிட்டு அங்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளதா? என்பதை உறுதி செய்ய வேண்டும். தீயணைப்புத் துறையின் மூலம் வெள்ளப்பாதிப்புகளிலிருந்து மக்களை காப்பாற்ற தேவையான உபகரணங்கள் மற்றும் முன்னேற்பாடுகளை செய்திட வேண்டும். நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலைகளில் உள்ள பாலங்களில் அடைப்புகள் உள்ளதா? என்பதை ஆய்வு மேற்கொள்ள வேண்டும். சாலைகளில் மரங்கள் இருந்தால் உடனடியாக அப்புறப்படுத்த தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். வெள்ள பாதிப்பின் போது, அவசரக்கால மாற்றுப்பாதைகளை கண்டறிந்து வைக்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், மக்களுக்கு தடையின்றி குடிநீர் முறையாக விநியோகம் செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி பகுதிகளில் குடிநீர் தொட்டிகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் சுத்தம் செய்ய வேண்டும். கழிவு நீர் கால்வாய்களை தூர்வாரி கழிவு நீர் தேங்காமல் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் உடைப்பு ஏற்பட்டால் உடனடியாக சரிசெய்யத் தேவையான மணல் மூட்டைகள் உள்ளிட்டவைகளை தயார் நிலையில் வைக்க வேண்டும். நோய்த் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள

வேண்டும். மருத்துவத்துறையின் மூலம் தேவைப்படும் மருந்துப்பொருட்களை கையிருப்பில் வைக்க வேண்டும். தேவையான ஆம்புலன்ஸ் வாகனங்கள், ஜெனரேட்டர்கள், மருத்துவக் குழுக்கள், அவசர கால உதவிக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். காவல் துறையினர் அலுவலர்களுடன் இணைந்து அவசரகால உதவிகளை மேற்கொள்ள வேண்டும். வழங்கல் துறையினர் பொதுமக்களுக்கு தேவையான பொது விநியோகத் திட்ட பொருட்கள் தேவையான அளவிற்கு இருப்பு வைக்க வேண்டும். கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் கால்நடைகளுக்கு நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இயற்கை சீற்றத்தால் மரணமடையும் கால்நடைகளை விரைந்து பிரேத பரிசோதனை செய்து பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நிவாரண உதவிகள் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பள்ளிக்கல்வித்துறை மற்றும் பொதுப்பணித்துறை இணைந்து பள்ளிக் கட்டடங்கள் அனைத்தும் நல்ல நிலையில் உள்ளதா? என்பதை கண்காணித்து 25.09.2017-க்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். வேளாண்மைத்துறையின் மூலம், 2015-ம் ஆண்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட போது நெல் பயிர்கள் பாதிப்படைந்த பகுதிகளிலுள்ள விவசாயிகளை நடப்பாண்டு காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பயிர் சேதங்கள் குறித்து வட்டாட்சியருடன் கூட்டுப்புலத்தணிக்கை செய்து உடனுக்குடன் அறிக்கைகளை அனுப்ப வேண்டும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம், மின்துண்டிப்பு ஏற்படும் பகுதிகளில் உடனடியாக சரிசெய்யும் பணிகளையும், அதிக வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் மின்சாரத்தை நிறுத்தி பொதுமக்களைக் காக்கும் பணிகளையும் மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து செய்திட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் 01.10.2017 முதல் கட்டுப்பாட்டு அறைகளை அமைத்து 24 மணி நேரமும் கண்காணிக்க வேண்டும். கிராமப்பகுதிகளில் ஏற்படும் சேதங்கள், குளம் உடைப்பு போன்றவைகளை உடனுக்குடன் தெரிவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வீடு இழப்பு, உயிர்ச்சேதம், கால்நடை சேதம் ஆகியவற்றிற்கு சேதம் ஏற்படின் உடன் நிவாரணம் வழங்க தேவையான நடவடிக்கைகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும். அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து வடகிழக்கு பருவமழை காலங்களில் பொதுமக்களுக்குத் தேவையான உதவிகளை, பணிகளை உடனுக்குடன் திறம்பட செய்து முடிக்க வேண்டும் என் பேசினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், வருவாய் கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.மைதிலி, (தென்காசி) திரு.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திரு.ராமசுப்பிரமணியன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.கனகராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.புண்ணியகோட்டி மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி